# தொழிலாளர் நீதிமன்றம், காஞ்சிபுரம்

**ID.No. : 13/2021** **சாட்சியம் : WW1**

**Name : Gnanasekar S/o Dhamodharan**

**Date : 27.04.2022**

**Time : 10:50 a.m., to 11:30 a.m.,**

**தொ.த.சா.1 திரு.ஞானசேகர் என்பவர் இன்று ஆஜர் செய்யப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார். எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

Perfect Electric and Electronics என்ற நிர்வாகத்தின் மீது நான் இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன். இது தனியார் வரையறுக்கப்பட்ட நிறுவனமாகும். எதிர்மனுதாரர் நிறுவனம் 2016ம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் தான் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக மாறியது என்றால் சரியல்ல. 06.05.2015 தேதியில் தான் எதிர்மனுதாரர் நிறுவனம் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக பதிவு செய்யப்பட்டது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. 2016ம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் தான் நிறுவனம் செயல்பட துவங்கியது என்றால் சரியல்ல. 3 வருட காலமாக நான் நிர்வாகமிட்ட வேலையை நேர்மையாகவும் குற்றம் குறையின்றி செய்துவந்தேன் என்று என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் பத்தி 1ல் குறிப்பிட்டுள்ளது தவறு. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ள மற்ற சங்கதிகள் தவறு என்றும் அதை பற்றிய விவரங்கள் எனக்கு தெரியாது என்றும் சொன்னால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் தொ.த.சா.ஆ.4 கடிதத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது அல்ல. இந்த கடிதத்தில் 3 வருடங்களாக எதிர்மனுதாரர் நிறுவனத்தில் பணிபுரிந்து வந்தேன் எனறு குறிப்பிட்டுள்ள விவரம் சரிதான். தொ.த.சா.ஆ.6 ஆவணத்திலும் நான் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் பிட்டராக பணிபுரிந்து வந்தேன் என்று குறிப்பிட்டுள்ள விவரம் சரிதான். 01.03.2009 தேதியிட்ட ஆவணத்தை காட்டி அதில் உள்ள கையொப்பம் மனுதாரருடையதா என்று கேட்டதற்கு அந்த கையொப்பம் தன்னுடையது அல்ல என்று கூறினார். 01.03.2009 தேதியிட்ட கடிதத்தின் படி நான் நேரிடையாக நிர்வாகத்தை அணுகி என்னுடைய வேலையை ராஜினாமா செய்யப்போவதாக கூறி கையொப்பமிட்டு கொடுத்துவிட்டு வந்தேன் என்றால் சரியல்ல. 15.07.2019 தேதியிட்ட தொ.த.சா.ஆ.2 வழக்கறிஞர் அறிவிப்பு நிர்வாகத்திற்கு அனுப்பியுள்ளேன் என்றால் சரிதான். அதற்கு நிர்வாகம் பதில் அறிவிப்பு கொடுக்கப்பட்டுள்ளதா என்று என்னுடைய வழக்கறிஞரிடம் கேட்டேன். நிர்வாகம் பதில் அறிவிப்பு அனுப்பியிருப்பதாக சொன்னார். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் நிர்வாகம் பதில்

அறிவிப்பு அனுப்பவில்லை என்று கூறியுள்ள விவரம் தவறு. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்கதிகள் உண்மையில்லை என்று தெரிந்தே பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. Perfect Electric and Electronics என்ற நிறுவனத்தில் 3 வருடங்கள் மட்டுமே பணிபுரிந்த நிலையில் அதை பின்னிட்டு தன்னிச்சயையாகவே வேலைக்கு செல்லாமல் ராஜினாமா கடிதம் கொடுத்துவிட்டு நின்றுவிட்டேன் என்றால் சரியல்ல. தொ.த.சா.ஆ.3 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள தேதியன்று எதிர்மனுதாரர் நிறுவனம் ஆரம்பிக்கப்படவேயில்லை என்றால் சரியல்ல. தொ.த.சா.ஆ.3 ஆவணத்தில் உள்ள கையொப்பம் யாரால் கையெழுத்து போடப்பட்டது என்று நான் பார்க்கவில்லை. நிறுவன உரிமையாளர் ஜான்சன் என்பவர் தான் இந்த கடிதத்தை என்னிடம் கொடுக்க வேறு ஒரு பணியாளரிடம் கொடுத்து அனுப்பினார். தொ.த.சா.ஆ.3 ஆவணத்தில் உள்ளது ஜான்சன் என்பவருடைய கையொப்பம் இல்லை என்றும் இந்த ஆவணத்தை போலியாக தயாரித்துள்ளோம் என்றால் சரியல்ல. பிப்ரவரி 2016ல் ஒப்பந்த தொழிலாளராக பணியில் சேர்ந்துவிட்டு 2019 மார்ச் மாதத்தில் நான் ராஜினாமா கடிதம் கொடுத்து விட்டு பணிக்கு செல்லாமல் நின்றுவிட்டேன் என்பதால் எந்தவித பரிகாரமும் கோர எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. இயக்குநரின் கையொப்பத்தை அங்கிருந்த மற்ற பணியாளர் உதவியுடன் போலியாக தயாரித்து இந்த வழக்கினை தாக்கல் செய்து தவறான பரிகாரம் கோருகின்றேன் என்றால் சரியல்ல. நான் PF தொகையை பெறவில்லை. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் PF தொகையை பெற்றுக்கொண்டதாக சொல்லியிருந்தால் அது தவறு. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் உள்ள அனைத்து சங்கதிகளும் தவறு என்பதால் என்னுடைய சாட்சியம் பொய்யானது என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

Typed to my dictation, read over to interpreted to the witness and acknowledged by him to be correct.

Sd/- P. Sivagnanam,
Presiding Officer,
Labour Court, Kancheepuram.

//True Copy//

P SIVAGNANAM

Presiding Officer, Labour Court
Digitally signed by P SIVAGNANAM
Location: Kancheepuram
Date: 2022.05.05 11:47:29 +0530

Presiding Officer,
Labour Court, Kancheepuram.